## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

<table>
<tr><td colspan="4">2024-ம் ஆண்டு ஜீன் மாதம்24-ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண் 44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>பூமிநாதன்</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**24.6.2024 OS.No. 18/2023 வா.சா. 1 பூமிநாதன் ஆஜர்**

**முதல் விசாரணை**:

1. நான் இந்த வழக்கின் வாதி தரப்பு1-ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 26.07.1993-ம் தேதியிட்டு கூலுத்தேவர் மகள் பொண்ணுப்பிள்ளை நாகலிங்கம் சேர்வைக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவண எண்.677/1993-ன் கணினி நகல் தாக்கல் செய்கிறேன். ( **கிரைய ஆவண எண்.677/1993-ன் கணினி நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 06.12.2021-ம் தேதியிட்டு 1-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட வாதி கையெழுத்திடாத கிரைய ஒப்பந்த ஆவணத்தின் நகல் தாக்கல் செய்கிறேன். ( **கிரைய ஒப்பந்த ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) (மேற்படி வா.சா.ஆ.6 ஆவணம் குறியீடு செய்வதற்கு பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

2. 11.05.2022-ம் தேதியிட்டு மாண்புமிகு.சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை WP(MD) No.9780/2022-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். ( **உத்தரவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) கடந்த 03.02.2007-ம் தேதியிட்டு தாவா சொத்திற்கு சாலை தேவர் கருப்பாயி அம்மாள் மகன் சா.முத்து பெயரில் உள்ள வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் **(வரி ரசீது அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 2.12.2023-ம் தேதியிட்டு தாவா சொத்தின் புல எண்.29/7 நில உடமை மேம்பாட்டு திட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.(**நில உடமை மேம்பாட்டு திட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 2.12.2023-ம்

தேதியிட்டு தாவா சொத்தின் புல எண்.29/7 அ பதிவேடு ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் .(**அ பதிவேடு ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 2.12.2023-ம் தேதியிட்டு தாவா சொத்தின் புல எண்.29/7 புலப்பட நகலின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் . (**புலப்பட நகலின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

4. 2.12.2023-ம் தேதியிட்டு சாலைதேவர் மனைவி கருப்பாயி அம்மாள் பெயரிலுள்ள பட்டாஎண்.31-க்குரிய 10(1) நகல் சான்றிடப்பட்ட கணினி நகல் தாக்கல் செய்கிறேன் . (**பட்டாஎண்.31-க்குரிய 10(1) நகல் சான்றிடப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 2.12.2023-ம் தேதியிட்டுதாவா சொத்தின் புல எண்.29/7-க்குரிய 1433-ம் பசலி சாகுபடி அடங்கல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் . (**புல எண்.29/7-க்குரிய 1433-ம் பசலி சாகுபடி அடங்கல் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

5. 09.01.2009 மற்றும் 02.02.2009 ஆகிய தேதிகளில் சா.முத்து, அவர்களுக்கு வருவாய் கோட்டாட்சியரின் விசாரணை அறிவிப்பு மற்றும் உத்தரவின் நகல் தாக்கல் தாக்கல் செய்கிறேன்.(**வருவாய் கோட்டாட்சியரின் விசாரணை அறிவிப்பு மற்றும் உத்தரவின் நகல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) (மேற்படி வா.சா.ஆ.14 ஆவணம் குறியீடு செய்வதற்கு பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது) 21.12.2023-ம் தேதியிட்டு தாவா சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் சான்றிடப்பட்ட கணினி நகல் தாக்கல் செய்கிறேன் ( **வில்லங்க சான்றிதழ் சான்றிடப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வாதியின் ஆதார் கார்டு அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.(**ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.